**மே – 11**

# TNPSC துளிகள்

- இந்திய அமெரிக்கரான தீபா அம்பேத்கர் நியூயார்க் நகரத்தில் உள்ள சிவில் நீதிமன்றத்தின் இடைக்கால நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சென்னையைச் சேர்ந்த ராஜராஜேஸ்வரி என்ற இந்திய அமெரிக்கர் நீதிபதியாக அந்நகரத்தில் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு நியமிக்கப்பட்ட இரண்டாவது இந்தியர் ஆவார்.
    - 2015-ஆம் ஆண்டில் ராஜராஜேஸ்வரி குற்றவியல் நீதிமன்றத்தின் நடுவராக நியமிக்கப்பட்டார். இவ்வகையில் இந்தியாவில் பிறந்த பெண், நியூயார்க் நகரத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்டதே முதல் முறையாகும்.
- பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த சிவாக்ஸ் ஜல் வஜிப்தார் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதன் காரணமாக நீதிபதி அஜய் குமார் மிட்டல் இடைக்கால தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- சிக்கிமில் உள்ள பாக்யாங் விமான நிலையம், ஜுன் மாதத்தில் துவக்கி வைக்கப்படும் போது, நாட்டின் 100-வது செயல்படும் விமான நிலையமாக உருவெடுக்க உள்ளது. நாட்டில் சிக்கிமில் மட்டுமே இதுவரையில் விமான நிலையம் இல்லாமல் இருந்தது.
- விம்பிள்டன் அதிகாரிகள் கூறியவரையில் 2019-ஆம் ஆண்டிற்கான ஆடவர் மற்றும் மகளிர் போட்டிக்கான வெற்றியாளர்கள் கடந்த ஆண்டைக் காட்டிலும் 50000 பவுண்டுகள் அதிகமாக, அதாவது 2.25 மில்லியன் பவுண்டுகள் என்ற அளவில் பரிசுத் தொகையினை பெறுவர்.
    - விம்பிள்டன் போட்டியில் கீழ்வரிசை போட்டியாளர்கள் தகுதி பெறும் நிலையிலிருந்து ஒற்றையர் போட்டிகளில் முதல் சுற்று முதல் நான்காம் சுற்று வரை 10 சதவிகித அதிகரிப்புத் தொகை மூலம் மிகுந்த ஊக்கத்தினை பெறுவர். இதன் மூலம் இந்த வருடத்திற்கான ஒட்டுமொத்தப் பரிசுத் தொகை 34 மில்லியன் பவுண்டுகளாக உயரும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டரஸ் மியான்மருக்கான தனது சிறப்புத் தூதராக சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த கிறிஸ்டைன் ஸ்காரனர் பர்ஜனரை நியமித்துள்ளார். இதற்கு முன்பு திருமதி. பர்ஜனர் ஜெர்மனி நாட்டிற்கான சுவிட்சர்லாந்தின் தூதராக 2015 முதல் இருந்து வந்தார்.
- முன்னாள் ஜம்மு-காஷ்மீர் மாநில சபாநாயகர் கவிந்தர் குப்தா அம்மாநிலத்தின் துணை முதல்வராக பொறுப்பேற்றுள்ளார். தற்போது துணை முதல்வராக உள்ள பா.ஜ.க-வைச் சேர்ந்த நிர்மல் சிங் புதிய சபாநாயகராக பொறுப்பேற்க உள்ளார். நிர்மல் சிங்கிற்குப் பதிலாக கவிந்தர் குப்தா துணை முதல்வராக பதவியேற்பார்.
- ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மணிப்பூரின் ஆளுநராக உள்ள நஜ்மா ஹெப்துல்லாவின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்து அசாம் ஆளுநரான ஜகதீஷ் முகியை மணிப்பூரின் பொறுப்பு ஆளுநராக நியமித்துள்ளார்.
- நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழு, முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகரான அசோக் லாகிரியை 15-வது நிதிக் குழுவின் முழுநேர உறுப்பினராக நியமித்துள்ளது. இவர் தற்சமயம், N.K. சிங் தலைமையிலான நிதிக் குழுவில் பகுதிநேர உறுப்பினராக உள்ளார்.

- ஆப்கான் அரசு அதிகாரப்பூர்வமாக மின்னணு அடையாள அட்டைகளை அல்லது இ-தாஸ்கிரா (e-Tazkira) என்பதனை விநியோகிக்கத் தொடங்கியுள்ளது. இந்த இ-தாஸ்கிரா சிறந்த நிர்வாகத்தையும், பொருளாதாரத் திட்டமிடுதலையும் மேம்படுத்தி அனைத்து குடிமக்களுக்கும் சிறந்த பொது சேவைகளை வழங்கிட ஆப்கானிஸ்தான் அரசிற்கு உதவிடும்.
- இறகுப்பந்து வீரரான கிடாம்பி ஸ்ரீகாந்த் ஆந்திரப் பிரதேசத்தின் துணை ஆட்சியராக முறையாகப் பொறுப்பேற்று உள்ளார்.

# தேசியச் செய்திகள்

## எதிர்காலத்திற்கான புத்துணர்வு கொண்ட எண்ணியல் உள்கட்டமைப்பிற்கான பிராந்திய மாநாடு

- 4-வது எதிர்காலத்திற்கான புத்துணர்வு கொண்ட எண்ணியல் உள்கட்டமைப்பிற்கான பிராந்திய மாநாடு பெங்களூருவில் நடத்தப்பட்டது.




- இந்த இரண்டு நாள் மாநாடு இந்திய அரசின் நிதித்துறை அமைச்சகத்தால் இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (Confederation of Indian Industry - CII) மற்றும் வளரும் நாடுகளுக்கான ஆராய்ச்சி மற்றும் தகவல் அமைப்பு முறை (Research and Information System for Developing Countries - RIS) ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்பட்டது.
- மும்பையில் 2018-ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 25 மற்றும் 26 தேதிகளில் இந்திய அரசால் நடத்தப்பட இருக்கும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (Asian Infrastructure Investment Bank - AIIB) மூன்றாவது வருடாந்திர கூட்டத்திற்கு முன்னோட்டமாக இந்த மாநாடு பார்க்கப்படுகின்றது.

## 2018 பாதுகாப்பான இந்தியா மாநாடு

- பிரதமரின் தொலைநோக்குப் பார்வையான “புதிய இந்தியா : பாதுகாப்பான இந்தியா 2018” (New India: Secure India 2018) என்ற இலக்கை மேம்படுத்தும் பொருட்டு 2018 பாதுகாப்பான இந்தியா மாநாடு புதுதில்லியில் உலகளாவிய தீவிரவாத தடுப்பு

அமைப்பால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- இடதுசாரி தீவிரவாதம், ஜம்மு-காஷ்மீரின் உட்புற பாதுகாப்பு நிலைமை, இணைய பாதுகாப்பு மற்றும் பிற விஷயங்கள் மீதான பல்வேறு அமர்வுகள் இந்த 2 நாள் மாநாட்டில் புகழ்பெற்ற நிபுணர்களால் தலைமை தாங்கப்படும்.

## அந்நிய நேரடி முதலீட்டிற்கான நம்பிக்கைக் குறியீடு - 2018

- உலகளாவிய ஆலோசனை நிறுவனமான A.T. கியர்னியால் வெளியிடப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டிற்கான நம்பிக்கைக் குறியீட்டில் இந்தியா 11-வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- 2018-ஆம் ஆண்டில் இந்தியா மூன்று இடங்களை தரவரிசையில் தவறவிட்டுள்ளது. இந்தியா 2017-ஆம் ஆண்டில் 8-வது இடத்தையும், 2016-ஆம் ஆண்டில் 9-வது இடத்தையும் பிடித்தது.

| Rank | Country |
|---|---|
| 1 | United States |
| 2 | Canada |
| 3 | Germany |
| 4 | United Kingdom |
| 5 | China |
| 6 | Japan |
| 7 | France |
| 8 | Australia |
| 9 | Switzerland |
| 10 | Italy |
| 11 | India |
| 12 | Singapore |
| 13 | Netherlands |
| 14 | Sweden |
| 15 | Spain |

- 2015-ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக இந்தியா முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடிக்காமல் இருப்பது இதுவே முதல் முறையாகும்.
- 2018-ஆம் ஆண்டிற்கான தரவரிசையில் முதல் 5 இடங்களைப் பிடித்த நாடுகள் அமெரிக்கா (முதலிடம்), கனடா (இரண்டாம் இடம்), ஜெர்மனி (மூன்றாம் இடம்), ஐக்கியப் பேரரசு (நான்காம் இடம்), சீனா (ஐந்தாம் இடம்) ஆகியனவாகும்.
- சமீபத்திய பெருநிறுவன வரிவிகிதக் குறைப்புகள், நிலையான மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான வலுவான மிகப் பெரிய சந்தையை கொண்டிருக்கும் காரணங்களினால் அமெரிக்கா தொடர்ச்சியாக ஆறாவது முறையாக முதலிடத்தை பிடித்திருக்கின்றது.

- பத்து ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக சுவிட்சர்லாந்தும், இத்தாலியும் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்துள்ளன.
- இந்தக் குறியீடானது அரசியல், பொருளாதார மற்றும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகளில் செய்யப்படும் மாற்றங்களானது வரும் ஆண்டுகளில் எவ்வாறு அந்நிய நேரடி முதலீட்டின் வரவை பாதிக்கும் என்பதற்கான வருடாந்திர ஆய்வு அறிக்கையாகும்.

## ஆயுஷ்மான் பாரத் தினம்

- கிராம சுயராஜ்ய அபியான் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக நாடு முழுவதும் ஏப்ரல் 29-ஆம் தேதி ஆயுஷ்மான் பாரத் தினம் கொண்டாடப்பட்டது.
- ஆயுஷ்மான் பாரத் திட்டம் நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் மருத்துவ வசதிகளை எளிதாகவும் மலிவாகவும் கிடைக்கச் செய்யும் திட்டமாகும்.
- ஆயுஷ்மான் பாரத் இரட்டைத் திட்டங்களைக் கொண்டுள்ளது. அதில் முதலாவது சமுதாயத்திற்கு அருகாமையிலேயே விரிவான ஆரம்ப சுகாதாரத்தை வழங்கும் பொருட்டு சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள் கொண்ட பிணையத்தை உருவாக்குவதாகும்.
- இரண்டாவது, இந்திய மக்கள்தொகையின் 40 சதவிகிதத்தினருக்கு மருத்துவமனை செலவுகளையும் சேர்த்து இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் காப்பீட்டு வசதியை வழங்கிட திட்டமிடுகிறது.

## கடற்படை தளபதிகள் மாநாடு

- இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் கடற்படை தளபதிகள் மாநாட்டின் துவக்க அமர்வில் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் உரையாற்றினார்.
- இந்த 4 நாள் மாநாட்டில், இந்தியக் கடற்படை இந்தப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் புதிய திட்டம் சார்ந்த படையனுப்பும் கொள்கை ஒன்றை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.
- இந்த புதிய படையனுப்பும் கொள்கை பிரதமரின் பிராந்தியத்தில் அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி (Security and Growth for All in the Region - SAGAR) என்ற தொலைநோக்குடன் ஒத்துப்போகும் வகையில் உள்ளது.

## குழந்தைகளுக்கான சர்வதேச நாடகத் திருவிழா

- கொல்கத்தாவில் குழந்தைகளுக்கான சர்வதேச நாடக விழாவில், இவ்விழாவை நடத்தும் இந்தியாவுடன் சேர்த்து மொத்தம் 8 நாடுகளைச் சேர்ந்த பல்வேறு நாடகக் குழுக்களைச் சேர்ந்த குழந்தைகள் பங்கேற்க உள்ளனர்.
- இந்த 8 நாடுகளாவன : பிரான்சு, ஸ்லோவேனியா, சுவாசிலாந்து, மெக்சிகோ, தென் ஆப்பிரிக்கா, இலங்கை, நேபாளம் மற்றும் வங்க தேசம்.
- கொல்கத்தா எசோ நாடக் ஷிகி என்ற அமைப்பினால் நடத்தப்படும் இந்த விழா "பாதுகாப்பான பயணம், பாதுகாப்பான வாழ்க்கை, பாதுகாப்பான குழந்தைகளின் வாழ்க்கை" ("Safe Drive Save Life, Save Kids' Life") என்ற கருப்பொருளில் அமைந்துள்ளது.

## காக்ளியர் பொருத்துதல் விழிப்புணர்வு திட்டம்

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டுத் துறையானது, ஹரியானாவின் பரிதாபாத்தில் ஹீதா சமுதாய மன்றத்தில் காக்ளியர் பொருத்துதல் விழிப்புணர்வு நிகழ்ச்சியை )'Cochlear Implant Awareness Programme') நடத்தியது.
- இந்த நிகழ்ச்சியானது இந்திய செஞ்சிலுவைச் சங்கமும் சர்வோதயா மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையமும் அரசாலும் இணைந்து நடத்தப்பட்டது.
- ஸ்வர் ஸ்வாகதம் என்று பெயரிடப்பட்ட ஒரு நிகழ்ச்சியானது, அரசுத் துறையின் "மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி" (Assistance to Disabled persons - ADIP) என்ற திட்டத்தின்கீழ் வரும் காக்ளியர் பொருத்தும் திட்டத்தைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மிகுந்த முக்கியத்துவம் கொண்டதாகும்.
- இரண்டு காதுகளும் கடுமையாக மற்றும் ஆழ்ந்த அளவில் பாதிக்கப்பட்ட ஒரு நபருக்கு கேட்கும் திறனை ஏற்படுத்த அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்படும் ஒரு மின்னணு சாதனமே காக்ளியர் பொருத்து கருவியாகும்.
- மும்பையைச் சேர்ந்த பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடுகளுக்கான அலி யாவர் ஜங் தேசிய நிறுவனமே (Ali Yavar Jung National Institute for Speech and Hearing Disabilities - AYNISHD) காக்ளியர் பொருத்து சிகிச்சைகளுக்கான அனுமதி வழங்கும் மையமாகும்.

## 15-வது ஆசிய ஊடக மாநாடு

- புது தில்லியில் 15-வது ஆசிய ஊடக மாநாட்டை (Asia Media Summit - AMS-2018) மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், புது தில்லியில் உள்ள இந்திய பெரு தகவல் தொடர்புகளுக்கான நிறுவனம் (Indian Institute of Mass Communication - IIMC), இந்திய ஒளிபரப்பு பொறியியல் ஆலோசனை நிறுவனம் (Broadcast Engineering Consultants India Limited - BECIL) ஆகியவற்றுடன் இணைந்து நடத்துகின்றது.




- இந்த வருடாந்திர மாநாட்டின் கருத்துருவானது "ஆசியாவிற்கும் அதைத் தாண்டியும் நமது கதைகளைக் கூறுதல்" ("Telling our Stories- Asia and More") என்பதாகும். இக்கருத்துரு இப்பிராந்தியத்தில் ஊடகத் துறையில் பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்திட திட்டம் தீட்டுகிறது,
- இந்த மாநாடானது ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் நடத்தப்படும் பெருமைமிகு வருடாந்திர நிகழ்வாகும். இந்நிகழ்வானது ஆசிய பசுபிக் ஒளிபரப்பிற்கான

மேம்பாட்டு நிறுவனம் தனது பங்குதாரர்களோடும் சர்வதேச நிறுவனங்களோடும் இணைந்து நடத்தப்படுகின்றது.

- இந்தியா முதன் முதலாக இந்நிகழ்ச்சியை நடத்துகின்றது.

### *ஆசிய பசுபிக் ஒளிபரப்பு மேம்பாட்டிற்கான நிறுவனம்*

- 1977-ல் நிறுவப்பட்ட இந்நிறுவனம், மின்னணு ஊடக மேம்பாட்டுத் துறையில் ஐக்கிய நாடுகள் ஆசிய பசுபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் நாடுகள் (United Nations Economic and Social Commission for Asia and the Pacific-UN-ESCAP) ஆகியவற்றிற்கு சேவையளித்திடும் ஒரு புதுமையான, அரசுகளுக்கிடையேயான பிராந்திய அமைப்பாகும்.
- இந்நிறுவனம் மலேசிய அரசால் நிர்வகிக்கப்படுகின்றது. இதன் தலைமைச் செயலகம் கோலாலம்பூரில் அமைந்துள்ளது.

## பொலிவுறு நகரங்களுக்கான தலைமை நிர்வாக அதிகாரிகளின் உச்சி மாநாடு

- மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரத்தில் பொலிவுறு நகரங்களுக்கான தலைமை நிர்வாக அதிகாரிகளின் முதல் உச்சி மாநாடு நடத்தப்பட்டது.
- இது மத்திய நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் நடத்தப்பட்டது. மேலும் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான இணை அமைச்சரால் (தனிப் பொறுப்பு) துவக்கி வைக்கப்பட்டது.
- இந்த 2 நாள் மாநாடு பொலிவுறு நகரங்களுக்கான தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கு மாற்றுத் துறைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கான நடைமுறையை உருவாக்கிடவும், அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் நடத்தப்பட்டது.
- 2015-ஆம் ஆண்டு, ஜுன் மாதம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, பொலிவுறு நகரங்கள் திட்டம் மிகுந்த நிலைமாற்றத்தை கொண்டுவரும் நகர்ப்புறத் திட்டங்களில் முக்கியமான ஒன்றாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## உலகின் 5-வது மிகப்பெரிய பொருளாதாரம்

- புதிய பெடரல் தகவலின்படி, அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் ஐக்கியப் பேரரசின் பொருளாதாரத்தை மிஞ்சி உலகின் 5-வது மிகப்பெரிய பொருளாதாரமாக உருவெடுத்துள்ளது.
- 2.7 டிரில்லியன் டாலர்கள் என்ற அளவில் மொத்த உள்நாட்டுப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ள கலிபோர்னியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குப் பிறகான வரிசையில் அமைந்துள்ளது.
- இந்தப் பட்டியலில் அடுத்து உள்ளவை ஐக்கியப் பேரரசும், இந்தியாவும். அதனைத் தொடர்ந்து முறையே பிரான்ஸ், பிரேசில் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் உள்ளன.
- 2002-ஆம் ஆண்டில் கலிபோர்னியா உலகின் 5-வது மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்டிருந்தது. ஆனால் மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக 2012-ல் பத்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.

### சார்க் நிதி அமைச்சர்கள் முறைசாரா மாநாடு

- சார்க் நிதி அமைச்சர்களின் 12-வது முறைசாரா மாநாடு பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரத்தில் நடத்தப்பட்டது. இது ஆசிய வளர்ச்சி வங்கியின் 51-வது வருடாந்திரக் கூட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது.
- இந்தக் கூட்டம் நேபாள நிதி அமைச்சர் யுப ராஜ் கதிவதா என்பவர் தலைமையில் நடத்தப்பட்டது.

## பொருளாதாரச் செய்திகள்

### பிரதான் மந்திரி ஜன விகாஸ் காரியகிரம்

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, பல்துறை வளர்ச்சித் திட்டத்தை சீரமைத்து, பிரதான் மந்திரி ஜன விகாஸ் காரியகிரம் என்று பெயரிடுவதற்கான முன்மொழிவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மேலும் இக்குழு, இத்திட்டம் 14-வது நிதிக் குழுவின் மீதமிருக்கும் காலம் முழுமையும் தொடர்வதற்கும் அனுமதியளித்துள்ளது.
- இத்திட்டம் அடையாளம் காணப்பட்ட சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள வளர்ச்சிக் குறைபாடுகளை களைய எண்ணுகிறது.
- மேலும் இத்திட்டம், அதில் கூறியுள்ள வரையறைகளைப் பொறுத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களினால் அடையாளம் காட்டப்படும் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளிலும் அமல்படுத்தப்படும்.
- பல்துறை வளர்ச்சித் திட்டம் 2008-2009-ஆம் ஆண்டுகளில் குறைந்தபட்சம் 25 சதவிகித சிறுபான்மையின மக்களைக் கொண்டுள்ள அடையாளம் காணப்பட்டுள்ள சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் 90 மாவட்டங்களில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான சொத்துக்களையும் அடிப்படை வசதிகளையும் உருவாக்கும் எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

### அட்லாண்டிக் குழு ஆலோசனை மன்றம்

- வாஷிங்டன்னை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் வெளியுறவுக் கொள்கை சிந்தனைக் களஞ்சியமான அட்லாண்டிக் குழு, ரிலையன்ஸ் குழுமத்தின் தலைவர் அனில் அம்பானியை தன்னுடைய குழுவில் இணைத்துள்ளது.
- அட்லாண்டிக் குழு என்பது சர்வதேச விவகாரங்களுக்கான துறையில் உள்ள அமெரிக்க சிந்தனைக் களஞ்சியமாகும்.
- 1961-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், சர்வதேச அளவில் அரசியல், வணிகம் மற்றும் புகழ்பெற்ற அறிஞர்களுக்கான கருத்துக்களத்தை (Forum) உருவாக்கித் தருகிறது.
- இக்குழு அட்லாண்டிக் உடன்படிக்கை நிறுவனத்தின் உறுப்பினர் ஆகும்.
- அதன் பத்து பிராந்திய மற்றும் கருத்துரு மையங்களின் மத்தியில், அட்லாண்டிக் குழுவின் தெற்காசிய மையம், வளர்ச்சி மற்றும் கூட்டுறவை தீவிரப்படுத்தும்

நோக்கத்தில் உள்ள புதுமையான மற்றும் நீடித்திருக்கக்கூடிய திட்டங்களை கையாள்கிறது.

### கிருஷ்ண மேனன் விருது

- பிஜியின் முன்னாள் பிரதமரான, இந்திய வம்சாவழியைச் சேர்ந்த மகேந்திர சௌத்ரி, இந்திய வம்சாவழியினருக்கு அவர் ஆற்றிய பங்களிப்பினை பாராட்டும் விதமாக வி.கே. கிருஷ்ண மேனன் விருதினைப் பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த விருது வி.கே. கிருஷ்ண மேனன் நிறுவன இயக்குநர் சிரியாக் மப்பிரயில் என்பவரால் அறிவிக்கப்பட்டது. இந்நிறுவனம், லண்டனில் உள்ள நேரு மையத்தில் மேனனது 122-வது பிறந்த தின விழாவை கொண்டாடியது.
- பிஜி தொழிலாளர் கட்சியின் தலைவர் சௌத்ரி ஆவார். முன்னாள் தொழிற்சங்கத் தலைவரான சௌத்ரி 1999-ஆம் ஆண்டு, மே மாதம் 19-ஆம் தேதி முதல் இந்திய பிஜியின் பிரதமராக அவர் பொறுப்பேற்றார். ஆனால் சரியாக ஒரு வருடத்திலேயே அவரது ஆட்சி புரட்சியின் மூலமாக கவிழ்க்கப்பட்டது. முதல் இந்திய-பிஜியன் பிரதமர் இவரே ஆவார்.
- வி.கே. கிருஷ்ண மேனன் நிறுவனம் 2006-ஆம் ஆண்டில் வி.கே. மேனனது வாழ்க்கை மற்றும் சாதனைகளைப் பற்றி நினைவு கூர்வதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

## முக்கிய தினங்கள்

### உலக செஞ்சிலுவை தினம் – மே 8

- உலக செஞ்சிலுவை தினம் என்பது உலக சிவப்பு சிலுவை மற்றும் சிவப்பு நட்சத்திர தினம் என்றும் அறியப்படுகிறது.




- இது ஒவ்வொரு வருடமும் மே மாதம் 8-ஆம் தேதி தேவையான மக்களுக்கு அதிகப்படியான அளவில் உதவிகளை வழங்கிடும் தன்னார்வலர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அனுசரிக்கப்படுகின்றது.
- 2018-ஆம் ஆண்டிற்கான உலக செஞ்சிலுவை சங்கத்தின் கருத்துரு "உலகத்திலிருந்து

வரும் மறக்க முடியாத புன்னகைகள்" ("Memorable smiles from around the world").

- இத்தினம், 1863-ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவை (Red Cross Committee of the International - ICRI) உருவாக்கிய டுனன்ட் ஹென்றி என்பவரது பிறந்த நாளை கொண்டாடுகிறது.

## எல்லைச் சாலைகள் நிறுவனம் – 58-வது நிறுவன தினம்

- 2018-ஆம் ஆண்டு, மே மாதம் 7-ஆம் தேதி, எல்லைச் சாலைகள் நிறுவனம் (Border Roads Organisation - BRO) தனது 58-வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இந்த நிறுவனம் நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வளர்ச்சியை ஏற்படுத்தும் முக்கியமான அரசு அமைப்பு ஆகும்.

Border Roads Organization

- இது ராணுவ அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது, இது 1960-ஆம் ஆண்டு, மே மாதம் 7-ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது.
- இந்த நிறுவனம் நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தொலைதூரப் பகுதிகளில் யுக்தி சார்ந்த உள்கட்டமைப்பை ஏற்படுத்தி, மேம்படுத்தி மற்றும் பாதுகாத்திட உதவிடும் ஒரு முக்கிய நிறுவனமாகும்.
- மேலும் இது நட்புறவு கொண்ட அண்டை நாடுகளிலும் சாலை வசதிகளை ஏற்படுத்தி பாதுகாத்திட உதவுகிறது.

## சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் – மே 4

- சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 4-ஆம் தேதி, அனைத்து தீயணைப்பு வீரர்களுக்கும் அவர்களது தன்னலமற்ற சேவைக்கும், அசாதாரண பங்களிப்புக்கும், விதிவிலக்கான தைரியத்திற்கும் பாராட்டு தெரிவிக்கும் விதமாக அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் 1999-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 4-ஆம் தேதி, 5 தீயணைப்பு வீரர்கள் ஆஸ்திரேலியாவின் புதர்ச் செடியின் தீயில் மாட்டிக் கொண்டு இறந்த சோக நிகழ்வுகள் காரணமாக உலகம் முழுவதும் கடிதம் அனுப்பப்பட்டு கோரிக்கை விடுத்ததன் விளைவாக ஏற்படுத்தப்பட்டது.
- இத்தினத்தின் நாடாக்களில், தீயணைப்பு வீரர்களின் பணிகளோடு சம்பந்தப்பட்ட

முக்கியக் கூறுகளை அடையாளப்படுத்தும் விதமாக நெருப்பிற்கான வண்ணமாக சிவப்பும் தண்ணீருக்கான வண்ணமாக ஊதாவும் இணைக்கப்பட்டுள்ளன.




- இந்த வண்ணங்கள் அவசர சேவைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- - - - - - - - - - - - - - -